நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு

முன்னிலை: **திரு.து.ஹரிராம், பிகாம்,பி.எல்.,**
நீதித்துறை நடுவர், திருவையாறு
வாக்குமூலம்

**திருவையாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**

வழக்கு எண். சிசி.61/ **2020**

வழக்கு சாட்சி- **அ.சா.6**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | விஜய் | : | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | மதியழகன் | : | தொழில் | வெல்டர் |
| கிராமம் | மணக்கரம்பை | : | சமயம் | |
| தாலுக்கா | திருவையாறு | : | வயது | 25/2023 |

( எதிரி ஆஜர்.)

**<u>நாள் : 02.03.2023</u>**

**முதல் விசாரணை:**

நான் மணக்கரம்பையில் குடியிருந்து வெல்டர் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது. முதலாவது கையெழுத்து விஸ்வநாதன் என்பவருடையது. அந்த பார்வை மகசர் **அ.சா.ஆ.3 /அ.சா.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 20.09.2018 அன்று விடியற்காலை 06.00 மணி அளவில் நானும், விஸ்வநாதன் என்பவரும் சம்பவ இடத்தில் நின்று கொண்டிருந்தபோது நடுக்காவேரி காவல்நிலையத்தை சேர்ந்தவர்கள் எங்கள் முன்பாக சம்பவ இடத்தைபற்றிய ஒரு மாதிரி வரைபடமும், பார்வை மகசரும் தயார் செய்தார்கள். அந்த பார்வை மகசரில் நானும், விஸ்வநாதன் என்பவரும் கையெழுத்து செய்தோம். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை

விபத்தில் இறந்துபோன ஸ்டாலின் மற்றும் இளையராஜாவும் எனது மாமா முறையாவார்கள். விபத்து நடந்ததற்கு பிறகு நான் மருத்துவமனைக்கு சென்றேன். காவல்நிலையத்திற்கு செல்லவில்லை. நான் கையெழுத்து செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது. விபத்தில் இறந்துபோன மாமாவிற்காக காவல்நிலையம் சென்று கையெழுத்து செய்துவிட்டு, வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

**(ஒம்./-திரு. து.ஹரிராம், பி.காம், பி.எல்.,**
நீதித்துறை நடுவர், திருவையாறு **)**